**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதியுயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை ரூபவாஹினி கூட்டுதாபனமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிழந்த ரூபா 469,815 பெறுமதியான 130 காசோலைகள் தொடர்பாக புதிய காசோலைகள் வழங்கப்பட்டிராததுடன் கடன்கொடுத்தோர் மீளத்தோற்றுவிக்கப்படாது நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளாக கணக்கிடப்பட்டிருந்தன. இதில் 28% ஆன அதாவது ரூபா 132,811 தொகை 2006 -2009 வரையான காலத்திற்குரியதாகும்.

**1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

---

(i) கூட்டுத்தாபனத்தின் சேவைநாடுனர் கடன்பட்டோர் மீதி ரூபா 596,893,398 ஆனதுடன் கடன் வழங்குவதற்கான கொள்கையின் படி, கடனுக்கான கால எல்லை ஒரு மாதத்திற்கு வரையறுக்கப்பட்ட போதிலும் கடன்பட்டோரில் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் அளவு 73% அல்லது ரூபா 438,302,752 தொகையாகவும் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோரர் அளவு 32% அல்லது ரூபா 188,422,097 தொகையுமாக இருந்தது. மூன்று மாதத்திற்கு மேற்பட்ட சேவை நாடுனர் கடன்பட்டோர் மீதி ரூபா 114,102,031 அல்லது 19% ஆகக் காணப்பட்டது.

(ii) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சேவை நாடுனர் கடன்பட்டோர் மீதியில் 2.4% அல்லது ரூபா 14,079,658 தொகையான கடன், அரசாங்க நிறுவகங்களில் இருந்து பெறவேண்டியிருந்ததுடன் அது 1 வருடம் முதல் 11 வருட கால எல்லைகளுக்குரித்தானவையாகும். இதில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் தொகை ரூபா 6,777,853 ஆகக் காணப்பட்டது.

(iii) சேவைநாடுனரின் பெயர் குறிப்பிடப்பட்டிராத 7 உடன்படிக்கைகள் தொடர்பான கடன்பட்டோர் மீதிப் பெறுமதியானது ரூபா 22,171,350 அல்லது மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 4% ஆகக் காணப்பட்டது.

(iv) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சேவைநாடுனர் கடன்பட்டோர் மீதியில் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை தொடர்பாக 4 நிறுவகங்களில் இருந்து ரூபா 17,724,931 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அது மொத்த கடன்பட்டோர் மீதியில் 3% ஆகக் காணப்பட்டது.

(v) சாதாரண சேவைநாடுனர் உடன்படிக்கைக்குரிய விளம்பர அறிவுறுத்தல்களை வெளியிட முன்னர் கடன் செலுததுதல் நம்பகத்தன்மையானது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கடன் மேவுகைப் பிரிவில் உறுதிப்படுத்தல் பெறப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று காணப்பட்ட போதிலும் பணம் செலுத்தாத நிறுவகத்திற்கு மீண்டும் மீண்டும் சேவை வழங்கி கடந்த 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகள் தொடர்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட முடியாத கடன் தொகை ரூபா 49,228,657 ஆகக் காணப்பட்டது.

(vi) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் ரூபா 55,480,000 தொகையான நானாவித கடன்பட்டோரிடம் இருந்து ஐயக்கடனுக்கான ஏற்பாடு ரூபா 21,717,482 அல்லது 39% ஆகக் காணப்பட்டது. அம் மீதியில் 2 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக நிலவிவரும் நபர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 219,215 தொகையும் வெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,482,135 தொகையும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,858,971 தொகையும் மருத்துவப் பட்டியல்களின் மீளளிப்பின் போது காப்புறுதிக் கம்பனியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,111,780 தொகையான மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(vii) இடர் கடன், போக்குவரத்துக் கடன், விசேட கடன் என்பவற்றைப் பெற்ற உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுகையில் அல்லது இராஜினாமாச் செய்கையில் கடன் நிலுவையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 154,079 ஐயக்கடனுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியதாயிற்று.

(viii) **முற்பணம் வழங்குதலும் அவற்றைத் தீர்த்து வைத்தலும்**

கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொடர்புபட்ட 2 விடயங்களுக்காக 2008 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 858,000 வழங்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் நடப்பாண்டின் இறுதியில் உள்ளவாறும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தப்படவேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை ரூபா 12,468,340 ஆனதுடன் இதில் ரூபா 83,572 தொகையான கடன் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்டது.

(ii) உடன்படிக்கையிடப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்து 06 மாத காலத்தின் பின்னர் நிர்மாணங்கள் தொடர்பாக பிடித்து வைத்தல் பணம் உரிய செயற்பாடு முறையாக மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தியதை அடுத்து உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு மீளச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்காக ரூபா 265,481 தொகையானது செலுத்தப்படாத பிடித்து வைத்தல் பண மீதியாகக் காணப்பட்டது.

**1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

---

04 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 3,441,755 கூட்டுமொத்தப் பெறுமதியான சேவை நாடுனர் மாற்றல்கள், பாதுகாப்புப் பிணை, செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் வேதனங்களும், நடைமுறை வேலை மீதிகள் தொடர்பான பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும் என்பன கூட்டுத்தாபனத்தின் ரூபா 40,024,000 தொகையான காணிகள் மற்றும் ஒளிபரப்பி நிலையங்கள் உள்ள காணிகள் தொடர்பான உரித்துறுதி, கையளிப்புப் பத்திரம், வர்த்தமானி அறிவித்தல் ஆகியவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவற்றை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (ஆ) மற்றும் 2000 யூன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2010 ஆம் ஆண்டின் போது இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 22,000,000 பெறுமதியுடைய நிலையான வைப்பிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் 24 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட தேசிய அரச பேரவையின் 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள், பொறுப்புகள் என்பவற்றைப் பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரச் சட்டம் | கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று தரம் மற்றும் பதவி நிலைத் தரங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் வருடாந்த சொத்துக்கள், பொறுப்புகள் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் உரிய 91 உத்தியோகத்தர்களில் 34 பேர் மாத்திரமே சொத்துக்கள், பொறுப்புகள் கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். |
| (இ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 5.1.3 ஆம் பிரிவு | நாளது வரையறுக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்திட்டம் வருட ஆரம்பத்திற்கு ஆகக் குறைந்தது 15 தினங்களுக்கு முன்னராக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறும் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பிரிவு 6.5.1 | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2010 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 மே 02 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2005 யூலை 01 ஆம் திகதிய பீஈடீ/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2010 ஆம் ஆண்டின் போது கணக்காய்வுக் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. |
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------------------------- | |
| (உ) | நி.பி. 880 | பிணை வைப்புச் செய்யவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிராததுடன் கூட்டுதாபனத்தின் காசாளர்களிடம் இருந்து மாத்திரம் பிணை பெறப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதிசார் மீளாய்வு

---

#### 2.1.1. நிதிசார் விளைவுகள்

---

கூட்டுதாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 42,120,000 தொகையான வரிக்கு முன்னரான தேறிய இலாபமானதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 12,360,000 ஆக இருந்ததனால் வரிக்கு முன்னரான இலாபத்தில் ரூபா 29,760,000 தொகையான முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளது.

#### 2.1.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

---

ஆண்டிற்கான இலாப அதிகரிப்பு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் மூலதன பாய்ச்சல் பின்பற்றப்பட்டமையால் வருமானத்தில் சேர்க்கப்பட்ட ரூபா 13,596,000 தொகையும் 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் Defined Benefit Plan பின்பற்றப்பட்டமையால் கணக்கு சீராக்கங்களின் படி உருவான ரூபா 48,065,000 தொகையான மிகை சீராக்கமும் தாக்கமளித்திருந்தது. மேற்குறித்த தாக்கங்களை அகற்றியதை அடுத்து கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் நட்டம் ஈட்டியிருந்ததுடன் இது ரூபா 19,541,000 ஆகக் காணப்பட்டது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

---

#### 2.2.1. கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்குகள்

---

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளித்தரப்பினரினால் 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபன பதவியணியினால் 11 வழக்குகள் என 19 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது இதில் 06 வழக்குகள் பூர்த்தியடைந்திருந்தன. இவ்வழக்குகளிற்காக வழக்கறிஞர் கட்டணமாக வெளிச் சட்டத்தரணிகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,268,844 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வெளித்தரப்பினரால் தொடரப்பட்ட 08 வழக்குகளுக்கு உரிய

முறையீட்டாளரினால் கோரப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 1,072,500,000 ஆகக் காணப்பட்டது. இவ்வாறே ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராக 18 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவ் வழக்குகளில் இருந்து கூட்டுத்தாபனம் அறவிடப்படுவதற்கு எதிர்பார்த்த தொகை ரூபா 21,175,516 ஆகும். இதில் 04 வழக்குகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியானதுடன் ரூபா 1,256,562 தொகை கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட்டிருந்தது. இவ் வழக்குகளிற்காக சட்டத்தரணிகளுக்கான கட்டணமாக மீளாய்வாண்டின் போது வெளிச் சட்டத்தரணிகளுக்கு செலுத்தப்பட்ட பண அளவு ரூபா 414,000 ஆகக் காணப்பட்டது.

### 2.2.2 மீள் சந்தை உடன்படிக்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கை வருமானம் ரூபா 44,969,989 தொகையானதுடன் செலவினம் ரூபா 71,932,107 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கைகளின் மூலம் கூட்டுத்தாபனம் அடைந்த நட்டம் ரூபா 26,962,118 ஆனதுடன் இந் நட்டம் மீள் சந்தைப்படுத்தல் வருமானத்திற்கு ஒப்பாக 60% ஆகக் காணப்பட்டது. இந் நட்டம் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 33,000,000 தொகையானதுடன் இது அவ்வாண்டிற்கான மீள் சந்தைப்படுத்தல் வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் 97% ஆகக் காணப்பட்டதுடன் 2008 ஆம் ஆண்டின் போது இந் நட்டம் ரூபா 21,453,000 ஆக இருந்ததனால் அது உழைக்கப்பட்ட வருமானத்தில் 221% ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், கூட்டுத்தாபனம் தொடர்ந்து மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையின் மூலம் பாரிய நட்டத்தை எய்துவது அவதானிக்கப்பட்டதுடன் 2009 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையின் மூலம் பெறப்பட்ட வருமானமும் செலவினமும் வெவ்வேறாக இனங்காணப்படக்கூடியவகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,755,112 தொகையான 08 மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கைகளுக்காக உடன்படிக்கைகள்

கைச்சாத்திடப்பட்டிராததுடன் இந் நிறுவகம் மாற்றீடாக கூட்டுத்தாபனத்திற்கு எவ்வித சேவையும் வழங்கியிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்காகப் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் திரைப்படக் கொள்வனவிற்காக ஏற்படுத்தப்பட்ட மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கை தவிர்ந்த ஏனைய சகல மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கைகளில் பின்வரும் பிரிவு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ''உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்தின் போது உரிய பெறுமதிக்கு போதுமான சேவை பெறப்படாவிடில் அந் நட்டம் நிறுவகத்தினால் ஏற்கப்பட வேண்டும்.'' இதன் பிரகாரம் 12 மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கைகளில் ரூபா 8,294,384 தொகையான நட்டத்தை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க நேர்ந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் இப் பெறுமதி பொதுவாக கடன்பட்டோராக மீளாய்வாண்டின் இறுதியின் போதும் காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. உரிய நிறுவகம் செயற்பாடற்ற சந்தர்ப்பங்களின் போது நட்டத்தை அடைவதற்கு நேர்ந்தமை தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் அண்டு வரை மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்டிருந்த 8 திரைப்படங்களுக்காக ரூபா 10,505,900 பெறுமதியான வான் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,465,975 ஆகும். இதன் பிரகாரம், கூட்டுத்தாபனம் அடைந்து கொள்ள வேண்டி ஏற்பட்ட நட்டம் ரூபா 9,039,925 ஆகக் காணப்பட்டது.

(உ) குறித்த கால எல்லை முடிவுற்றதும் அம் மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையில் நிலவும் வரவு அல்லது செலவு மீதியினை தள்ளுபடி செய்யும் விதத்தில் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் ரூபா 361,100 பெறுமதியான கணக்கு மீதிகள் உரிய கால எல்லை கடந்த போதிலும் மேலும் கடன் கொடுத்தோர் மீதியாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நிதிக்கூற்றுக்களில் வெளியாகின.

(ஊ) மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையின் கீழ் ரூபா 1,730,900 பெறுமதியான வான் காலத்தை வழங்கி 2007 ஆம் ஆண்டின் போது

பெறப்பட்ட 2 திரைப்படங்கள் பின்னர் கூட்டுத்தாபனக் கொள்கைகளுக்கு முரணானதென தீர்மானிக்கப்பட்டு காட்சிப்படுத்துவதற்குத் தடை செய்யப்பட்டது. கொள்வனவு குழு இவ்வாறு தொலைக்காட்சி ஊடகத்தில் ஒளிபரப்ப முடியாத திரைப்படங்கள் மீள் சந்தைப்படுத்தல் உடன்படிக்கையின் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(எ) ரூபா 750,000 பெறுமதியான வான் நேரத்தை தொலைக்காட்சிக்குப் பெற்றுக்கொண்ட ஓர் திரைப்படம் 2006 யூலை 28 ஆம் திகதி முதல் 2008 யூலை 27 வரையான காலத்தின் போது 3 காட்சி நேரங்களில் ஒளிபரப்புவதற்காக உடன்படிக்கையைத் தயாரித்து ரூபவாஹினிக்கு உரிமையைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் இத் திரைப்படம் அக்காலப்பகுதியின் பின்னர் ஒரு முறையேனும் ஒளிபரப்பப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் போதும் ஒளிபரப்பப்பட்டிருக்கவில்லை. ஒளிபரப்பிற்கு உகந்ததல்ல என தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் ஒளிபரப்பப்படவில்லை என தலைவர் அறிவித்திருந்தார்.

### 2.2.3 முதலீடு

1992 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளின் போது ‘‘லங்கா புவத்’’ நிறுவகத்தில் ரூபா 1,104,000 தொகையான பங்களிப்பு முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை எவ்வித பங்கிலாபமும் பெறப்பட்டிராததுடன் அம் முதலீடு மேலும் அவ்வாறே பேணப்பட்டிருந்தது.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மக்கள் தொலைக்காட்சி நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 2009 செப்தெம்பர் மாதம் முதல் ஒரு வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த ஓர் வீட்டிற்காக கூட்டுத்தாபனம் புனரமைப்பு மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 604,998 தொகையும் குத்தகை வாடகையாக ரூபா 29,585 தொகையும் செலுத்தியிருந்த போதிலும் அது எந்தவித செயற்பாட்டிற்காகவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

தொலைக்காட்சி ஒலி ஒளி நூலகத்தின் நடவடிக்கைகளை முறையாகவும் வினைத் திறனுடனும் மேற்கொள்வதற்கு அதன் நடவடிக்கைகளை கணணி மயப்படுத்தி முன்னேற்றமடையச் செய்யும் நோக்குடன் ரூபா 2,055,502 செலவில் 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தன்னியக்க பார்கோட் முறைமை (Automated Barcode Solution) மற்றும் இலத்திரனியியல் கெசட் பாதுகாப்பு முறைமை (EAS system) என்பன 2010 யூலை மாதம் முடிவிலும் பயன்படுத்தப்படாதவாறு இருந்தன.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(இ) ஒளிபரப்பு நேர வருமானம்

(ஈ) முற்பணங்கள்

(உ) பாதீடு

(ஊ) காசோலைகளை இரத்துச்செய்தல்

(எ) மீள்சந்தை உடன்படிக்கை

(ஏ) குத்தகை வீடு